

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திருத்தணி சட்ட மன்ற தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி கூட்டம் திருத்தணியில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து பயிற்சி கூட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையற்றினார். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் ப. அப்துல் மாலிக், க.பிரபு கஜேந்திரன், மாநிலநிர்வாகிகள் சூர்யாகிருஷ்ணமூர்த்தி,விக்னேஷ்ஆனந்த், ஒ.ஏ.நாகலிங்கம், சண்முகநாதன், மாஸ்டர் சேகர், வி.வினோத் குமார், ஆர்த்தி ரவி, ஜி.ரவீந்திரா, சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், கே.ராஜேந்திரன், மா.ரகு, சி.ஜெ. செந்தில் குமார், ஏ.எல்.விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, மா.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், ஆர்.ராஜா, உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கோவளம் ஊராட்சியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, திருப்போரூர் ஒன்றியக்குழுத் தலைவர் எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்த,

# பசுமை வழித்தடத் திட்டம் முறையாகப் பின்பற்றபடுகிறதா?

## மக்களவையில் – எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியை, தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்த பசுமை வழித்தட திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்றும், அதற்கான கட்டமைப்புகள் முறையாக பராமரிக்கபடுகிறதா? என்றும், இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா? என்றும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் எரிசக்தி முறையாக தேசிய பகிர்மானத்துடன் இணைக்கப்படுகிறதா? என்றும் ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



அதற்கு ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

தமிழ்நாடு அரசின் கட்டமைப்புகள் அனைத்தும் மாதாந்திர அறிக்கைகளை, ஒன்றிய மின்சார ஆணையத்திற்கு ஒவ்வொரு மாதமும் அளித்து வருகின்றன என்றும், அதன் மூலம் பசுமை வழித் திட்டம் உள்பட அனைத்து கட்டமைப்புகளையும், ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை கண்காணித்து வருகிறது. திட்டங்கள் முறையாக பின்பற்றப் படுகிறதா என்று திட்ட மதிப்பிட்டு குழு கண்காணித்து வருகிறது. 624 சர்க்யூட் கிலோ மீட்டர் மின்கடத்தும் கோபுரங்களும், 2200 ஆஏஹ திறன் கொண்ட துணை நிலையங்களும் செயல்படும் வகையில் 4000 மெகா வாட் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தயாரிக்க ரூபாய் 719 கோடி செலவில் பசுமை வழித்தட திட்டம் தமிழ் நாட்டில் நிறைவேற்றப் படஉள்ளது.

மேலும் 10570 மெகா வாட் சூரிய சக்தி உள்பட, கடந்த ஜூன் மாத நிலவரப் படி, தமிழ் நாட்டில் 25749 மெகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. 756 முஏ மின் கோபுரங்கள் மற்றும் 400 முஏ மின் கடத்தும் கோபுரங்களின் உதவியால் தேசிய மின்பகிர்மானத்துடன், தமிழ் நாட்டில் உற்பத்தி முறையாக பகிர்ந்து அளிக்கப் படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# ஜாபர்கான்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 7- ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஆக.4

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 -ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139 வது வட்டம், ஜாபர்கான்பேட்டை கங்கையம்மன்கோவில் தெருவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி 7.8.2025 வியாழக்கிழமை அன்று காலை 6.30 மணியளவில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர்அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், வி.பி. ஜானகிராமன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன் எம்.எஸ்.ஹலிபாபு, சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எஸ். பி.கோதண்டம், எம்.நாகா, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், டி.என்.சிவமணி, த.மணி, மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, வி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

பாபு எல்லப்பன், மா.திலீபன் மதிவாணன், வ.ராஜா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### சேதமடைந்த

# இரயில்வே பாலங்களைப் புனரமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் – மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள சிதிலமடையும் நிலையி லுள்ள பாலங்களை புனரமைக்க கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு முழுவதும் எத்தனை இரயில்வே பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன?

நிதி ஒதுக்கீடு செய்வதில் தொய்வு மற்றும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை துரிதமாக முடிக்காததால் பாலங்கள் இடிந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளதா? அதுசார்ந்த விவரங்களை வெளியீடுக.

நாடு முழுவதும் பழைய இரயில்வே பாலங்களை சீரமைக்க ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன? என்று மாநிலங்களவையில் மரு. கனிமொழி என்.வி. என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்துள்ள பதில் வருமாறு :-

01.04.2025ஆம் தேதி வரை ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 845 இரயில்வே பாலங்கள் இந்திய ரயில்வே கட்டமைப்பில் பல்வேறு காலங்க ளில் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.



இவற்றை கண்காணிக்க பிரத்யேக கண்காணிப்பு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இருமுறை, அதாவது பருவ மழைக்கு முன்பு மற்றும் பின்பு என இரண்டு கட்டங்களாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

சில குறிப்பிட்ட இரயில்வே பாலங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவற்றின் ஸ்திரத்தன்மைக்கேற்ப சீரமைக்கப்பட்டு வலுப்படுத்துவதற்கான பணிகள் காலத்துக் கேற்றாற்போல மேற்கொள்ளப்படுகிறது.

மண்டல வாரியாகவும் இரயில்வே பாலங்கள் பற்றிய தரவுகள் கையாளப்படுகின்றன. தமிழ்நாடு தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளாக தென்மண்டல இரயில்வே நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் உள்ளது.

2014 ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டுவரையில் 15,335 இரயில்வே பாலங்கள் புனரமைக்கவோ அல்லது புதுப்பிக்கப்பட்டோ உள்ளன. இவற்றில் 2,165 பாலங்கள் தமிழ்நாட்டிற்கு உட்பட்டவை.

01.04.2025 வரை 12,877 இரயில்வே மேம்பாலங்களில் புனரமைப்பு அல்லது புதுப்பிப்பதற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,471 இரயில்வே பாலங்கள் தமிழ்நாட்டிற்கு உட்பட்டவை.

சாலை வசதிகள், திட்டங்களுக்கு வழங்கப்படும் ஒப்புதல் சார்ந்த நெறிமுறைகள், பருவ நிலை, தளவாடங்கள் கையிருப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இதுபோன்ற இரயில்வே பாலங்கள் புனரமைப்பு பணிகளின் வேகம் மாறுபடுகிறது.

இவ்வாறு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளித்துள்ளார்.

### வட சென்னையைச் சேர்ந்த இருவருக்கு

# பிரதமரின் மருத்துவ நிவாரண நிதி!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஏற்பாடு!

சென்னை, ஆக.4-

புற்றுநோய் மற்றும் இதயக் கோளாறால் பாதிக்கப்பட்டு மருத்துவ உதவிக்காக உதவி கோரிய வட சென்னை தொகுதியைச் சேர்ந்த இருவரின் விண்ணப்பங்களின் பேரில், தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலம், பிரதமர் தேசிய நிவாரண நிதி (PMNRF) வாயிலாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் மேயியூர் குப்பத்தைச் சேர்ந்த சுப்பிரமணி அவர்களுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக ரூ.1,00,000/ (ஒரு லட்சம்) மற்றும் சென்னை பெரம்பூரைச் சேர்ந்த திருமதி. ருக்மணி அவர்களுக்கு இதய அறுவை சிகிச்சைக்காக ரூ.50,000/ (ஐம்பது ஆயிரம்) நிதியுதவி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

நிதியுதவி பெற்ற பயனாளிகள் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தொலைபேசி வாயிலாக தெரிவித்துக் கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 18 வது மற்றும் 19வது வார்டுகளிலும் திரிசூலம் ஊராட்சியிலும் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாவட்டக் கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அந்தந்த துறைகளிடம் வழங்கி தீர்வு கண்டு நல திட்ட உதவிகளை வழங்கினார் அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதிச் செயலாளர் இ. எஸ். பெர்னாரர்ட் மாமன்ற உறுப்பினர்கள் பிருந்தா தேவி சிலம்பரசன் பிரேமலதா பண்டரிநாதன் மாநகராட்சி துணை ஆணையர் மாநகராட்சி ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் வட்டக் கழக செயலாளர்கள் வி. என். சிலம்பரசன் தமிழ் கோ. ரங்கநாதன் திரிசூலம் மாரிமுத்து பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாக கொண்டு செல்வீர்!

## திருத்தணி தொகுதி பாக முகவர்கள் சமூக வலைதள பயிற்சிக் கூட்டத்தில் – அமைச்சர் சா.மு.நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஆக. 04

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திருத்தணி சட்டமன்ற தொகுதி இளைஞர்களுக்கு சமூக வலைதளப்பயிற்சி கூட்டம் திருத்தணியில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நகர கழக செயலாளர் வி.வினோத்குமார் வரவேற்புரை ஆற்றினார்.



இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து பயிற்சி கூட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையற்றினார். உடன் தலைமைக் கழக செய்தி தொடர்புக்கு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளம் தன்னார்வாலர் விக்னேஷ் ஆனந்த், கலந்துகொண்டு பாக இளைஞர்களுக்கு சமூகவலைதளப் பயிற்சி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில், தி.மு.க. வலுவான கொள்கை ரீதியான கட்சி. இங்கு உண்மையாக உழைப்பவர்களுக்கு மட்டுமே அங்கீகாரம் கிடைக்கும். பணம், ஜாதி பெயரால் இங்கு வளர்ந்து விட முடியாது. இளைஞரணியில் புதிதாக பொறுப்புகளுக்கு வந்துள்ளவர்கள் அமைப்பு ரீதியாக உழைத்து உயர் பொறுப்புகளுக்கு வரவேண்டும். சமூக வலைதளங்களை மையமாக வைத்து சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் முழுமையாக சமூக வலைதள பக்கங்களை பயன்படுத்தி தி.மு.க. அரசின் சாதனைகள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இளைஞரணி என்பது கழகம் தோன்றிய காலத்தில் இருந்தே கொள்கையோடு வளர்த்த ஒரு கட்சி என்றால் அது திராவிட முன்னேற்ற கழகம் மட்டும்தான் எனவும், அன்று முதல் இன்று வரை இளைஞரணி என்பது மிகவும் வலிமையாக உள்ளது. இளைஞரணியினர் கழகத்திற்காக அயராது உழைத்தால் மட்டுமே உயர்ந்த நிலைக்கு வர முடியும் என பல்வேறு கருத்துக்களை தெரிவித்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் ஒ.ஏ.நாகலிங்கம், சண்முகநாதன், மாஸ்டர் சேகர், ஒன்றிய நகர செயலாளர்கள் வி.வினோத் குமார், ஆர்த்தி ரவி, ஜி.ரவீந்திரா, சி.ஜெ.சீனிவாசன், என். கிருஷ்ணன், கே.ராஜேந்திரன், மா.ரகு, சி.ஜெ.செந்தில் குமார், ஏ.எல்.விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, மா.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், ஆர்.ராஜா, உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைக்க – சரியான நேரத்தில்

# நோயறிதல் சேவைகளை உறுதி செய்ய ஒன்றிய அரசிடம் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா?

## மக்களவையில் – க.செல்வம் கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் சுகாதாரம் மற்றும் குடும்ப அமைச்சகத்திற்கு எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(அ) தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் இலவச மருந்து வச் சேவை முயற்சி மற்றும் இலவச நோயறிதல் சேவை முயற்சியை அரசு செயல்படுத்துகிறதா. அப்படியானால், அதன் விவரங்கள், தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக.

(ஆ) இந்த முயற்சிகளின் கீழ் பல்வேறு நிலைகளில் பொது சுகாதார வசதிகளில் இலவசமாக வழங்க கட்டாயப்படுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் நோயறிதல் சோதனைகளின் எண்ணிக்கை. அத்தியாவசிய

மாவட்ட (இ) துணை சுகாதார மையங்கள் (SHCs), ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), சமூக சுகாதார மையங்கள் (CHCs), மருத்துவமனைகள் (SDHs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்த முயற்சிகளை தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு செயல்படுத்தியுள்ளது.

(ஈ) தமிழ்நாட்டில் உள்ள பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதையும், சரியான நேரத்தில் நோயறிதல் சேவைகளை வழங்குவதையும் உறுதி செய்வதற்கு மத்திய அரசிடம் ஏதேனும் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்.

(உ) இலவச மருந்துகள் மற்றும் நோயறிதல்களை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் நோயாளிகளின் பாக்கெட் செலவை மேலும் குறைக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அமைச்சரின் பதில்கள் வருமாறு:-

(அ) முதல் (இ)க்கு தேசிய சுகாதார இயக்கதின் கீழ், தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலகள்/யூனியன் பிரதேசங்களுக்கும் பொது சுகாதார வசதிகளில் இலவச அத்தியாவசிய மருந்துகள் மற்றும் இலவச அத்தியாவசிய நோயறிதல்களை வழங்குவதற்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்கள் திட்ட செயல்படுத்தல் திட்டங்களில் (PIPs) முன்வைக்கும் தேவைகளின் அடிப்படையில் இலவச மருந்துகள் சேவை முன்முயற்சியின் கீழ், அத்தியாவசிய மருந்துகளை பரவலாக அணுகுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு உட்பட நாட்டில் பொது சுகாதார வசதிகளில் வசதி வாரியான அத்தியாவசிய மருந்துகள் பட்டியலை (EDL) கிடைக்கச் செய்ய அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் இலவச நோயறிதல் சேவை முயற்சி (FDSI) திட்டத்தை ஆதரிக்கிறது. இந்த திட்டம், சமூகத்திற்கு நெருக்கமான, அணுகக் கூடிய மற்றும் மலிவு விலையில் நோயியல் மற்றும் கதிரியக்க நோயறிதல் சேவைகளை வழங்கு நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

இது கையிலிருந்து செலவழிக்கும் செலவை (OOPE) குறைக்கிறது. தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள சுகாதார நிலையங்களில் பரிந்துரைக்கப்படும் மருந்து மற்றும் நோயறிதல் சேவைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாநிலங்கள் கூடுதலாகச் சேர்க்க நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளன.

தமிழ்நாடு மாநில அரசு அறிவித்தபடி, PHC, CHC, SDH மற்றும் DHQ மாவட்டத்தில் மொத்தம் 482 அத்தியாவசிய மருந்துகளும், DH மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தில் 484 சிறப்பு மருந்துகளும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் DHல் மொத்தம் 134 சோதனைகள், SDHல் 111, CHCல் 97, PHCயில் 63 மற்றும் துணை சுகாதார மையங்களில் 14 சோதனைகள் வழங்கபகப்படுகின்றன.



கொள்முதல், விநியோகச் சங்கிலி மற்றும் சரக்கு மேலாண்மை ஆகியவற்றில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய அமைச்சகம் பல அடுக்கு கண்காணிப்பு அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது. பல மாநிலகள் மருந்துகளின் கொள்முதல், நுகர்வு மற்றும் நிரப்புதலைக் கண்காணிக்க மருந்துகள் மற்றும் தடுப்பூசி விநியோக மோலாண்மை அமைப்பு (DVDMS) போன்ற டிஜிட்டல் தளங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. திறந்த தரவு கிட் (ODK) கருவி மூலம் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கும் தன்மை மற்றும் நோயறிதல் உள்ளிட்ட சுகாதார விதிகளின் பல்வேறு அளவுருக்கள் மாநிலங்களால் மதிப்பிடுகின்றன. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் மூத்த அதிகாரிகளின் கள வருகைகள், இந்த சேவைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாட்டையும் கண்காணிக்கின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் நேற்று (02.08.2025) சென்னை, தி.நகர், ராமகமாத்துபுரத்தில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் ஆலய 64 ஆம் ஆண்டு ஆடித்திருவிழாவில் அன்னதானத்தை தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஏழுமலை உள்ளிட்ட கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி சார்பில் நலஉதவிகளை கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் கலைஞர் நகர் க.தனசேகரன் வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் விக்கிரமராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.